**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No.11/2022 PW .4**

| | |
|---|---|
| பெயர் :ரேவதி | தந்தை/கணவர் பெயர்:ஜெகநாதன் |
| ஊர் : | தாலுகா : |
| வயது : | தொழில் : |
| ஜாதி : | சமயம் : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.07.2025

---

**(எதிரி ஆஜர்)**

**17.07.2025 முதல் விசாரணை:**

1. நான் தற்போது நைனாப்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். அசா.1 என்னுடைய தம்பி மனைவி ஆவார். எதிரி எனது ஊர்க்காரர் ஆவார். கடந்த 17.01.2021ம் தேதி மாலை சுமார் 05.30 மணி முதல் 6.00 மணியளவில் அசா.1 வயலுக்கு சென்ற போது எதிரி அசா.1னுடன் வம்பு செய்தார். அசா.1 கத்தியதால் அவருடைய வாயை பொத்தினார். அசா.1ன் வாயை பொத்திய போது எதிரியின் கையை அசா.1 கடித்துள்ளார். அப்போது எதிரி வேகமாக கையை இழுத்த போது அசா.1ன் பல் உடைந்து விட்டது. அசா.1 அழுது கத்தியதால் எதிரி அவரை அடித்து முள்ளில் தள்ளி விட்டு சென்றார். அதில் அவருக்கு முள் குத்தி கை மற்றும் கால்களில் காயம் ஏற்பட்டது. மேலும் அசா.1க்கு எதிரி அடித்ததில் கண் அருகே சிவந்து ஊமை காயம் ஏற்பட்டது. காயம்பட்டவர் 1/2 பரலாங் தூரம் உள்ள என்னுடைய வீட்டிற்கு அசா.1 வந்தார். என் மகனையும் எனது அம்மாவையும் அசா.1யை மருத்துவமனைக்கு அழைத்து செல்ல சொன்னேன். அவர்கள் எஸ்எஸ் கோட்டை காவல் நிலையத்திற்கு சென்று விவரம் சொன்ன பிறகு காவல் நிலையத்தில் இருந்து திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நான்கு நாட்கள் அசா.1 உள்நோயாளியாக இருந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

2. சம்பவம் நடந்த மறுநாள் போலீசார் என்னை விசாரித்தார்கள். சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கையில் 17.01.2021ம்

தேதி மாலை சுமார் 05.30 மணி முதல் 6.00 மணியளவில் அசா.1 வயலுக்கு சென்ற போது எதிரி அசா.1னுடன் வம்பு செய்தார் என்றும் அசா.1 கத்தியதால் அவருடைய வாயை பொத்தினார் என்றும் அசா.1ன் வாயை பொத்தியபோது எதிரியின் கையை அசா.1 கடித்துள்ளார் என்றும் அப்போது எதிரி வேகமாக கையை இழுத்த போது அசா.1ன் பல் உடைந்து விட்டது என்றும் அசா.1 அழுது கத்தியதால் எதிரி அவரை அடித்து முள்ளில் தள்ளி விட்டு சென்றார் என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அசா.1ம் எதிரியின் மனைவியும் நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான். எதிரி திருமணத்திற்கு பின்பு வெளிநாட்டில் வேலை செய்து வந்தார் என்றால் சரிதான். எதிரி மற்றும் அவரது மனைவியும் எதிரி வெளிநாட்டில் வந்த பிறகு பிரிந்து விட்டார்கள் என்றால் சரிதான். கணவன் மற்றும் மனைவி பிரிந்து போனதற்கு அசா.1 காரணம் என்பதால் அவர்களுக்கு இ,டையே பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரியல்ல பேசி கொள்வார்கள். நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் அசா.1ம் எதிரியும் முன்விரோதம் காரணமாக பேசிக் கொள்ளமாட்டார்கள் என்றால் சரியல்ல. கணவன் மனைவி பிரச்சனை சம்பந்தமாக எனது வீட்டிற்கு வந்து எனது அம்மாவிடம் பஞ்சாயத்து பேசினார்கள் என்றால் இல்லை. ஏற்கனவே இருந்த முன்விரோத்தின் காரணமாக மாடு வயலில் கட்ட சென்ற போது மாடு விரட்டியதில் விழுந்ததில் ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரி தாக்கியதாகவும் பொய்யான புகாரை கொடுத்ததன் அடிப்படையில் அசா.1 க்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்தவுடன் நான் காவல் நிலையம் செல்லவில்லை. மருத்துவமனைக்கு சென்றேன். நான் சொல்வது போல் எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் முன்விரோதத்தை வைத்து கொண்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறனே் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி அரசு மற்றும் குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பு வழக்குரைஞர்களுக்கு முன்பாக சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
சிங்கம்புணரி.